மாலை முரசு

பக்கங்கள் 16

## நாட்டில் மேலும் 1,534 பேர் கைது



நாட்டில் இன்று அதிகாலை 12.30 மணியுடன் நிறைவடைந்த 24 மணித்தியால நடவடிக்கையின் போது 04

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 மார்கழி 08 ஞாயிற்றுக்கிழமை 24.12.2023 அதிர்வு 146



### நத்தார் தினத்தையொட்டி

# சகல தேவாலயங்களுக்கும் விசேட பொலிஸ் பாதுகாப்பு

நத்தார் தினத்தையொட்டி நாடு முழுவதிலும் உள்ள கிறிஸ்தவ தேவாலயங்களில் இன்றும் நாளையும் விசேட பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்படவுள்ளது.

இந்தப் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக 7 ஆயிரத்து 500 பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இன்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இந்தக் விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, நத்தார் தினத்தையொட்டி இன்று நள்ளிரவு கட்டான-ஹல்பேவில புனித பிரான்சிஸ் தேவாலயத்தில் பிரதான நத்தார் தின ஆராதனை இடம்பெறவுள்ளது. 04



# தம்மிக்க களமிறங்குவதால் ரணில் போட்டியிடமாட்டாராம்



### இப்படிக் கூறுகின்றது சஜித் அணி



ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி தம்மிக்க பெரேராவைக் களமிறக்கவுள்ளதால் ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க போட்டியிடமாட்டார் என்று அடித்துக் கூறியுள்ளது ஐக்கிய மக்கள் சக்தி.

இது தொடர்பில் கருத்து வெளியிட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம். மரிக்கார் கூறியவை வருமாறு:-

“ஜனாதிபதித் தேர்தலுக்கான அறிவிப்பு எதிர்வரும் ஜுலை மாதம் விடுக்கப்பட வேண்டும். அந்தத் தேர்தலில் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க போட்டியிடமாட்டார் என்பது உறுதியாகியுள்ளது.

அவர் ஜனாதிபதித் தேர்தலில் இரு தடவைகள் தோல்வி அடைந்தார். மூன்றாவது தடவை பொது வேட்பாளரைக் களமிறக்கினார். 2015 இலும் அதுவே நடந்தது. ஆனால், இன்று அதிஷ்டத்தால் ரணில் ஜனாதிபதி ஆகியுள்ளார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் சம்மேளனம் 04



# யாழ். போதனா வைத்தியசாலையின் சேவைகளை வினைத்திறனுடன் முன்னெடுக்கும் கலந்துரையாடல்

## கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் இடம்பெற்றது

(எஸ். நிதர்ஸன்)

யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலையின் சேவைகள் மற்றும் செயற்பாடுகளை மேலும் வினைத்திறனுடன் முன்னெடுக்கும் வகையிலான கலந்துரையாடல் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் இடம்பெற்றது.

யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலைக்கு நேற்று முன்தினம் (22) விஜயம் செய்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, புதிதாக நியமனம் பெற்ற வைத்தியசாலை அபிவிருத்தி குழு உறுப்பினர்கள் மற்றும் வைத்தியசாலை நிர்வாக சபையினருடன் பல்வேறு விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடினார்.

வைத்தியசாலையில் நிலவும், வைத்திய நிபுணர்கள், வைத்தியர்கள் மற்றும் வைத்திய தாதிகள் உட்பட்ட ஆளணிப் பற்றாக்குறை மற்றும் அதனை நிவர்த்தி செய்வது தொடர்பாகவும் விரிவாக ஆராயப்பட்டது.

அதேபோன்று, கட்டட வசதிகள் பாரிய பிரச்சினையாகக் காணப்படுகின்ற நிலையில், தற்போது கட்டப்பட்டு வரும் 6 மாடி கட்டடத் தொகுதியின்



வேலைகளை பூரத்தி செய்வதற்கு குறைந்த பட்சம் 800 மில்லியன் ரூபா நிதி தேவைப்படுவதாகவும், தற்போது 400 மில்லின் ரூபா ஒதுக்கப்பட்டுள்ள நிலையில் மேலும் 400 மில்லியன் ரூபா நிதி தேவைப்படுவதாகவும் அமைச்சரின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டது. அதைவிட புதிதாக காணிகளை கொள்வனவு செய்து வைத்தியசாலையை விரிவுபடுத்த வேண்டிய தேவை தொடர்பாகவும் எடுத்துரைக்கப்பட்டது.

தட்டுப்பாடாக உள்ள மருந்துப் பொருள்களைப் பெற்றுக் கொள்வதற்கு முயற்சி செய்தல், ஆய்வுகூட வசதிகள் விஸ்தரித்தல், தொற்று நோயாளர்களைப் பராமரிப்பதற்கான ஒரு பிரிவு உருவாக்குதல் உட்பட பல்வேறு நிவர்த்திக்க வேண்டிய விடயங்கள் தொடர்பாக ஆராயப்பட்டன.

அதேபோன்று, வெளிநோயாளர் பிரிவின் சேவை நேரத்தை அதிகரிப்பது உட்பட மக்களுக்கான சேவை விஸ்தரிப்பது, வைத்தியசாலை வளாகத்தைச் சுற்றி அமைந்துள்ள கழிவுநீர் வடிகான்களை சுகாதார முறைப்படி பேணுதல் உட்பட பல்வேறு விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டன.

இந்த நிலையில் கருத்துரைத்த அமைச்சர், விரைவில் ஜனாதிபதி வடக்குக்கான விஜயத்தை மேற்கொள்ள வுள்ளார். முக்கியமான விடயங்களை அடையாளப்படுத்தி அறிக்கை ஒன்றை தயாரித்தால் ஜனாதிபதியுடன் கலந்துரையாடி சாதகமான முடிவுகளை பெற்றுக் கொள்ள முடியும் என்று தெரிவித்தார்.





# வாங்காமம் கரும்புத் தோட்டத்தில் சடலம்: விசாரணைகள் ஆரம்பம்; இருவர் கைது!

(பாறுக் ஷிஹான்)

அம்பாறை மாவட்டம் இறக்காமம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட வாங்காமம் பகுதியில் உள்ள கரும்புத் தோட்டம் ஒன்றில் இருந்து மீட்கப்பட்ட சடலம் தொடர்பில் விசாரணை முன்னெடுக்கப் பட்டுள்ளது.

கடந்த நேற்றுச் சனிக்கிழமை (23) காலை இனம் தெரியாத நபர் ஒருவர் வெட்டிக் கொலை செய்யப்பட்டுள்ளார் என்று இறக்காமம் பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற தகவலை அடுத்து மேலதிக விசாரணைகளை பொது மக்களின் ஒத்துழைப்புடன் பொலிஸார் மேற்கொண்டிருந்தனர்.

இதன் போது அக்கரைப்பற்று பகுதியைச் சேர்ந்த 63 வயது மதிக்கத் தக்க முஹம்மது சித்தீக் ஹாஜியார் என்பவரே இவ்வாறு வெட்டிப் படு கொலை செய்யப்பட்டுள்ளமை அடை யாளம் காணப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பில் இரு இளைஞர்கள் சந்தேகத்தின் பேரில் கைது செய் யப்பட்டுள்ளனர். இந்த நிலையில் மேலதிக விசாரணைகளை இறக்காமம் பொலிஸார் முன்னெடுத் துள்ளனர்.

வேலை முடித்த பின்னர் அதற்கான கூலி கொடுப்பதில் ஏற்பட்ட குளறுபடியே இந்தக் கொலைக்கு காரணமாக அமைந்திருக்கலாம் என்று சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் கடந்த வெள் ளிக்கிழமை காலை இடம்பெற்றிருந்த நிலையில், சடலம் அருகில் இருந்த வீடு ஒன்றில் மறைக்கப்பட்டு சனிக் கிழமை அதிகாலை வேளையில் கரும் புத் தோட்டத்தில் சடலம் வீசப் பட்டிருப்பது விசாரணையில் தெரியவந்துள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை (22) காலை வாங்காமம் பகுதியில் உள்ள தனது பண்ணையை பார்வையிடுவதற் காக சென்றவர் வீடு திரும்பவில்லை என்று உறவினர்கள் தேடிச் சென்ற வேளை சடலம் மீட்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மன்னம்பிட்டி பாலத்தினுள் குடை சாய்ந்தது வாகனம்!

(ஏ.எல்.எம்.ஷினாஸ், சப்னா றிபாஸ்)

பொலனறுவ பிரதேசத்தில் இருந்து மட்டக்களப்பு நோக்கி வந்து கொண்டிருந்த டிப்பர் ரக கூலர் வாகனம் மன்னம் பிட்டி பாலத்துக்கு அருகில் பயணிக்கும் போது டயர் வெடித்ததில் விபத்துக் குள்ளாகி பாலத்துக்குள் சாய்ந்த சம்பவம் இன்று (24) இடம்பெற்றது.

எனினும் எவருக்கும் உயிர் ஆபத்து ஏற்படவில்லை. கிரைன் உதவியுடன் மீட்புப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

இந்த விபத்து காரணமாக மன்னம் பிட்டி பாலத்தின் ஊடான போக்குவரத்தில் சில மணி நேரம் நெரிசல் ஏற்பட்டது.










# யாழ். பல்கலை மாணவி திடீர் காய்ச்சலால் சாவு!

யாழ். பல்கலைக்கழக கலைப் பீடத்தில் இறுதியாண்டில் கல்வி கற்கும் குணரத்தினம் சுபீனா என்ற மாணவி உயிரிழந்துள்ளார்.

மேற்படி மாணவி காய்ச்சல் காரணமாகத் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

இந்நிலையில், அந்த மாணவி நேற்று உயிரிழந்துள்ளார்.

உடற்கூற்றுப் பரிசோதனைக்குப் பின்னர் உயிரிழப்புக்கான காரணம் தெரியவரும் என்று வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

## மூச்சுத் திணறல் ஏற்பட்டு 6 மாதக் குழந்தை மரணம்

யாழ்ப்பாணத்தில் மூச்சு விடச் சிரமப்பட்ட 6 மாதக் குழந்தை உயிரிழந்துள்ளது.

யாழ்., திருநெல்வேலி பகுதியைச் சேர்ந்த பிருந்தாபரன் அக்சரா எனும் 6 மாதக் குழந்தையே நேற்று இவ்வாறு உயிரிழந்துள்ளது.

குழந்தை மூச்சு விடச் சிரமப்பட்ட நிலையில் பெற்றோர் குழந்தையை யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்த்த நிலையில், குழந்தை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளது.



## யாழில் தேநீர் அருந்திக் கொண்டிருந்த வங்கி உத்தியோகத்தர் திடீர் உயிரிழப்பு




யாழ்ப்பாணத்தில் உணவகம் ஒன்றில் தேநீர் அருந்திக் கொண்டிருந்த வங்கி உத்தியோகத்தர் திடீரென மயங்கி வீழ்ந்து உயிரிழந்துள்ளார்.

பருத்தித்துறை, தம்பசிட்டியைச் சேர்ந்த பாலசுப்பிரமணியம் மதனகுமார் (வயது 39) என்பவரே உயிரிழந்துள்ளார்.

கொடிகாமம் பகுதியில் உள்ள உணவகம் ஒன்றில் நேற்று தேநீர் அருந்திக்கொண்டிருந்த வேளை, திடீரென மயங்கிச் சரிந்துள்ளார்.

அதையடுத்து அங்கிருந்தவர்கள் அவரை மீட்டு ஓட்டோவில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றபோது, அவர் ஏற்கனவே உயிரிழந்து விட்டார் என்று மருத்துவர்கள் அறிக்கையிட்டுள்ளனர்.

உயிரிழந்தவர், ஒட்டுசுட்டான் இலங்கை வங்கி கிளையின் நிறைவேற்று தர உத்தியோகத்தர் என்பது குறிப்பிடத்தக்கது.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**சகல தேவாலயங்களுக்கும்...**

பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் தலைமையில் குறித்த ஆராதனை நடைபெறவுள்ளது என்று கொழும்பு பேராயர்களின் பொதுமக்கள் தொடர்பாடல் பணிப்பாளர் அருட்தந்தை ஜூட் கிரிஷாந்த பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

**நாட்டில் மேலும்...**

1,534 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களில் 23 பேரின் சொத்துக்கள் மற்றும் உடைமைகள் தொடர்பான விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

அத்தோடு 99 பேர் புனர்வாழ்வுக்காகப் பரிந்துரைக்கப்பட்டுள்ளனர் என்று பொதுப் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

**தம்மிக்க...**

அண்மையில் நடைபெற்றது. இதன் போது தமது கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் தம்மிக்க பெரேரா என்பதை அவர்கள் உறுதிப்படுத்தினர். மாநாட்டில் தம்மிக்க பெரேராவுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டிருந்தது.

எனவே, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவில் ரணிலுக்கு இடமில்லை. ஐக்கிய தேசியக் கட்சியிலும் அவர் களமிறங்கமாட்டார். ஏனெனில் தோல்வி நிச்சயம்.

அதேவேளை, வயது முதிர்ந்த அரசியல்வாதிகள் ஜனாதிபதிப் பதவிக்கு வருவதை இளைஞர்கள் விரும்பவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது." – என்றார்.



# ஜனசபா வேலைத் திட்டம் சாய்ந்தமருதில் ஆரம்பம்

(அஸ்ஹர் ஆதம் )

தேசிய ஜனசபா செயலகத்தால் நடைமுறைப்படுத்தப்பட்டுவரும் ஜனசபா வேலைத்திட்டம் சாய்ந்தமருதில் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இரண்டாம் கட்ட முன்னோடி ஜனசபா தேசிய வேலைத்திட்டத்தில் சாய்ந்தமருது பிரதேச செயலகமும் உள்வாங்கப்பட்டுள்ளது.

இதன்படி இந்த வேலைத்திட்டத்தின் இரண்டாம் கட்ட முன்னோடி வேலைத் திட்டத்தில் சாய்ந்தமருது பிரதேச செயலகத்தின் 9 ஆம் கிராம உத்தியோகத்தர் பிரிவான பொலிவேரியன் கிராமம் தெரிவு செய்யபட்டுள்ளது.

இதற்கான செயற்குழுவில் 25 பேர் அங்கம் வகிக்கவுள்ளனர். இக்குழுவில் இப்பிரிவிலுள்ள இளைஞர்கள் குழுக்கள், கிராம அபிவிருத்தி மற்றும் மகளிர் அபிவிருத்திச்சங்கங்கள், சமுர்த்திச் சங்கங்கள் மற்றும் பொது அமைப்புக்களைப் பிரிதிநிதித்துவப்படுத்தி பிரதிநிதிகள் தெரிவு செய்யப்பட்டனர்.

பிரதேச செயலர் எம்.எம்.ஆசிக் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வு பொலிவேரியன் கலாசார மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் ஜனசபா திட்டத்தின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கான கண்காணிப்பு அதிகாரி ரவீந்திர டீ.சில்வா, மாவட்டத் திட்டமிடல் பணிப்பாளர் எச்.பி.அனீஸ் உதவிப் பிரதேச செயலர் எம்.ஐ.முவஃபிகா, திட்டமிடல் உதவிப் பணிப்பாளர் கே.எல்.ஏ.ஹமீட், நிர்வாக உத்தியோகத்தர் எம்.என்.எம்.றம்ஸான், நிர்வாக கிராம உத்தியோகத்தர் எம்.எஸ்.நளீர், பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் ஏ.சி.முஹம்மட் திட்டமிடல் சிரேஷ்ட அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.பி.எம்.அஸ்ஹர் உட்படப் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வைத் தொடர்ந்து புதிதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள செயற்குழு உறுப்பினர்களுக்கான அறிவூட்டல் நிகழ்வு இடம்பெற்றது.



# மனித நுகர்வுக்குப் பொருத்தமற்ற பொருள்கள் மாத்தளையில் அழிப்பு

## சந்தேக நபர் கைதாகி விளக்க மறியலில்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

அக்குரணை பிரதேசத்தில் அண்மையில் பெய்த மழையால் ஏற்பட்ட வெள்ள நீரில் மூழ்கிய நுகர்வுக்குப் பொருத்தமில்லாத சுமார் 5 லட்சம் ரூபா பெறுமதியான – மீண்டும் சந்தைப்படுத்த வைக்கப்பட்டிருந்த உணவுப் பொருள்கள் நீதி மன்ற உத்தரவின் பேரில் பொது சுகாதார பரிசோதகர்களால் அழிக்கப்பட்டன. அத்துடன் சந்தேக நபர் ஒருவரும் கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

மத்திய மாகாண ஆளுநர் லலித் கமகே மற்றும் மாத்தளை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் சமிந்த வீரக்கோன் ஆகியோரின் பணிப்புரையின் பேரில் மாத்தளை, உக்குவளை, வறக்காமுறை பிரதேசத்திலுள்ள களஞ்சியசாலை ஒன்றை சுற்றி வளைத்த போது மனித நுகர்வுக்குப் பொருத்தமில்லாத பழரச போத்தல், தேங்காய் எண்ணை, பிஸ்கட் வகைகள், சிறு குழந்தைகளுக்கான பால்மா, உப்பு, நூடில்ஸ், பக்கட்டில் அடைக்கப்பட்ட உணவுப் பொருள்கள், பேக்கரி உணவுப் பொருள்கள் மற்றும் சுவையூட்டிகள் என்பன மீட்கப்பட்டன.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் மாத்தளை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர். இதன்போது நீதிமன்ற நீதிவான் நில்மினி ரங்கொத்கே உணவுப் பொருள்களை அழிக்குமாறும் சந்தேக நபரை விளக்க மறியலில் வைக்குமாறும் உத்தரவிட்டார்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## கடைசிவரைக் காத்திருப்போம்!

இன்னும் ஒரு வாரத்தில் பிறக்கப் போகும் 2024 ஆம் ஆண்டு இலங்கையைப் பொறுத்த வரை தேர்தல் வருடம் என்று அறிவிக்கப் பட்டாயிற்று.

ஜனாதிபதித் தேர்தல், பொதுத் தேர்தல், தொடர்ந்து உள்ளூராட்சித் தேர்தல், அதை அடுத்து மாகாண சபை தேர்தல்கள் நடை பெறலாம் என்று ஊகிக்கப்படுகின்றது.

இனி என்ன? தேர்தல் என்றதும் பொது மக்கள் காதில் பூச்சூற்றுவதற்கு அரசியல் வாதிகள் தயாராகி விடுவார்கள். அதுவும் இத்தேர்தல் ஜனாதிபதியைத் தேர்வு செய்யும் தேசியமட்டத் தேர்தல் என்பதால் வடக்கு, கிழக்கு தமிழர் தாயக வாக்காளர்களின் காதில் பூவைப்பதற்குத் தென்னிலங்கை அரசியல்வாதிகளும் பின்நிற்க மாட்டார்கள். அந்த வகையில் முதல் பூ வைக்கும் வேலையை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க வின் வலது கையாக விளங்கும் அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ ஆரம்பித்திருக்கி றார்.

"ஜனாதிபதித் தேர்தல் அடுத்த வருடம் நடைபெற்றே தீரும். அந்தத் தேர்தலில் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க போட்டியிடுவார் என்பதில் மாற்றுக் கருத்து இல்லை. அவர் ஐக்கிய தேசியக் கட்சி சார்பாக அல்லது பெரும்பாலான கட்சிகளின் இணைக் கத்துடன் பொது வேட்பாளராகக் களமிறங்கு வார்.

ஜனாதிபதித் தேர்தலில் அனைத்துத் தமிழ்க் கட்சிகளும் ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள் கின்றோம்.

தமிழ்க் கட்சிகள், தமிழர்கள் சார்பில் பொது வேட்பாளரைக் களமிறக்கித் தமிழ் மக்களின் வாக்குகளைச் சிதறடித்து, வர லாற்றுத் தவறை இழக்கக்கூடாது. தமிழர்க ளுக்கு அரசியல் தீர்வைப் பெற்றுத்தரக் கூடிய ஒரே தலைவர் ரணில்தான். எனவே, அவரின் கரங்களைப் பலப்படுத்தத் தமிழர்க ளும், தமிழ்க் கட்சிகளும் முன்வரவேண்டும்." - என்று ரணில் புகழ் பாடியிருக்கின்றார் ரணிலுக்குச் செஞ்சோற்றுக் கடன் தீர்க்க வேண்டிய ஹரின்.

தமிழர்களுக்கு ரணில் ஒன்றும் புதியவர் அல்லர். எப்போதுமே நம்ப முடியாதவர் என்று அவருடன் பல சமரச முயற்சிகளை முன்னெடுத்த விடுதலைப் புலிகளே சான்ற ளித்து உறுதிப்படுத்தியுள்ளனர். அதனால் இரண்டு ஜனாதிபதி தேர்தல்களில் தமிழர் தரப்பினால் பாடம் புகட்டித் தோற்கடிக்கப் பட்டவர்.

கடந்த ஒன்றரை ஆண்டு கால அவரது ஆட்சியும், போக்கும், பேச்சும், செயற்பாடும் புலிகள் ஏற்கனவே அளித்த சான்றுரை தப்பித் தவறிக் கூட பிசகாமல், அச்சொட்டாகச் சரி என்பதை நிரூபித்து நிற்கின்றன.

அரசமைப்பில் இருக்கின்ற விவகாரத்தை நடைமுறைப்படுத்த - 13 ஆம் திருத்தத்திற்கு செயலுருக் கொடுக்க - நாடாளுமன்றத்தின் அனுமதி தேவை என்று தமிழர்களுக்கு புதிய அரசியல் பாடம் நடத்திய 'அரசியல் அதிமே தாவி' அவர்.

இந்த ஒன்றரை ஆண்டுகால ஆட்சி அதி காரத்தில் தமிழர்களுக்கு எதையும் நேர்மை யுடன் செய்யாதவர் அவர் என்ற அவ நம்பிக்கைக் கருத்தை தமிழர்கள் மனதில் ஊன்றச் செய்தவர்.

சிங்கள - பௌத்த பேரினவாதிகளின் மனதை வெல்வதற்காக சிறுபான்மையினரை எந்த அளவுக்கும் கைவிடத் தயங்காதவர் என்று மனப்பதிவைத் தமிழர்கள் மத்தியில் ஏற்படுத்தி நிற்பவர்.

கொடூரமாகத் தொடரும் பேரினவாத ஆக்கிரமிப்புக்குப் பச்சைக் கொடி காட்டி, இடம் அளித்து வசதி செய்பவர்.

அரசமைப்பில் இருக்கும் 13 ஆம் திருத் தத்தை வெட்டிக் குறைத்து நடைமுறைப் படுத்துவது குறித்து இப்போது பேசுபவர் ரணில். அவருடன் ஒப்பிடுகையில் சஜித் பிரேமதாஸ எத்தனையோ தடவை மேல் எனலாம். குறைந்தபட்சம் 13 இன் முழு நடைமுறையாக்கம் என்று மாறாத குரலில் கூறிக் கொண்டிருப்பவர் சஜித்.

ஜனாதிபதித் தேர்தல் விடயத்தில் தமிழர் தரப்பு தனது முடிவை முன்கூட்டியே அறி விக்கக் கூடாது. எதிரும் புதிருமான வாய்ப்பு களை - சாத்தியங்களை - வழிவகைகளை - கோடி காட்டியபடி, தன் சீட்டுகளை தன் நெஞ்சுக்கு நெருக்கமாக, வெளியே காட்டா மல் வைத்து, விளையாட வேண்டும்.

தமிழர்கள் உட்பட தமிழ்ப் பேசும் மக்க ளின் ஆதரவு தமக்குக் கிட்டும் என்ற வாய்ப்புத் திறந்திருக்கும் வரை, அதை மீறி பேரினவாதிகளை அரவணைக்க முயலாமல் பிரதான வேட்பாளர்கள் கடைசிவரைக் காத்திருப்பார்கள். அப்படிக் காத்திருக்க வைக்க வேண்டும். அதன் மூலம் பேரின வாதிகள் பிரதான வேட்பாளர்களுடன் நேரத்துடன் ஒன்று திரண்டு ஒரு பெரும் சக்தியாக உருவெடுக்க இடம் அளிக்காமல் - சந்தர்ப்பம் வழங்காமல் - பார்த்துக் கொள்ள வேண்டும். அதற்காக இவ்விடயத்தில் தமிழர் தரப்பு தேர்தல் அணுகுமுறைக்கான எல்லா வாய்ப்புகளையும், ஒன்றையும் மூடாமல் கடைசி நேரம் வரை திறந்து வைத்திருந்து, கடைசிக் கட்டத்தில்தான் தந்திரோபாயமான முடிவை எடுக்க வேண்டும். பேரினவாதிகள் ஒன்று திரள இடம் அளிக்காமல், தந்திர அரசியல் செய்வது தமிழர் தலைமைகளின் திட்டமாக அமைய வேண்டும். அது முக்கி யம்.




# கல்முனை சுகாதார நிறுவனங்கள் விருதுகள் வழங்கிக் கௌரவிப்பு

**(ஆதம்)**

சுகாதார பராமரிப்பின் தரமும் பாதுகாப்பும் தொடர்பான மதிப்பீடுகளின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட கல்முனை பிராந்திய சுகாதார நிறுவனங்கள் மற்றும் நிறுவனத் தலைவர்கள் சுகாதார அதிகாரிகளால் விருதுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலின் கீழ் பிராந்திய தர முகாமைத்துவ பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி ஏ.எம்.ஹில்மியால் ஏற்பாடு செய்யப்பட்ட விருது வழங்கும் நிகழ்வு நேற்று சனிக்கிழமை (23) பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சகிலா இஸ்ஸடீன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் டீ. ஜி.எம்.கொஸ்டா பிரதம அதிதியாகவும், அம்பாறை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் எஸ்.ரீ.ஏ. பிரசங்க சேரசிங்க கௌரவ அதிதியாகவும், கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் டாக்டர் ஏ.எல்.எப்.ரஹ்மான், அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் டாக்டர் ரீ.எஸ்.ஆர்.ரீ.ஆர்.ரஜாப் ஆகியோர் விசேட அதிதிகளாகவும் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் சம்மாந்துறை, நிந்தவூர், திருக்கோவில் மற்றும் பொத்துவில் ஆதார வைத்தியசாலைகளின் வைத்திய அத்தியட்சகர்கள், கல்முனை பிராந்திய பிரிவுத் தலைவர்கள், சுகாதார வைத்திய அதிகாரிகள், பிரதேச வைத்தியசாலைகளின் பொறுப்பு வைத்திய அதிகாரிகள், ஆரம்ப மருத்துவ பராமரிப்பு பிரிவுகளின் பொறுப்பு வைத்தியர்கள், சுகாதாரத் துறை உத்தியோகத்தர்கள் ஊழியர்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர்.

சுகாதார அமைச்சின் சுகாதாரப் பராமரிப்பின் தரமும் பாதுகாப்பும் தொடர்பில் பணிப்பாளர் அலுவலகத்தால் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் கீழ் உள்ள சுகாதார நிறுவனங்களிடையே மேற்கொள்ளப்பட்ட சுகாதார சேவையில் முன்மாதிரியானநடைமுறைகளுக்கான தர மதிப்பீட்டின் அடிப்படையில் பாலமுனை உளநல இடைத்தங்கல் பராமரிப்பு நிலையம் முதலாமிடத்தையும், சம்மாந்துறை ஆதார வைத்தியசாலை இரண்டாம், மூன்றாமிடங்களையும் பெற்றுக்கொண்டன.

சகல மதிப்பீடுகளின் அடிப்படையிலும் தெரிவு செய்யப்பட்டு முதல் மூன்று இடங்களைப்பெற்ற சுகாதார நிறுவனங்கள் விருதுகள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டன. ஏனைய நிறுவனங்களின் சிறந்த செயற்பாடுகளைப் பாராட்டி பாராட்டுச் சான்றுதழ்கள் வழங்கப்பட்டன.






# விசேட தேவையுடைய மனிதர்கள் எந்தவகையிலும் குறைவானவரல்லர்

## குச்சவெளி பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் முபாறக் தெரிவிப்பு!

(அபு அலா)

இறைவன் ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் ஒவ்வொரு குறைகளை வைத்திருக்கின்றான். அவைகள் வெளிப்படையாகவும், மறைமுகமாகவும் இருக்கின்றது. இதை வைத்துக்கொண்டு யாரையும் யாரும் குறைத்து மதிப்பிட முடியாது. இந்த வகையில் விசேட தேவையுடைய மனிதர்கள் எந்த வகையிலும் குறைவானவர்கள் இல்லை.

இவ்வாறு குச்சவெளி பிரதேச சபையின் முன்னாள் தவிசாளரும் கிழக்கு மாகாண பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் பணிப்பாளர் சபை உறுப்பினருமாகிய ஏ.முபாறக் தெரிவித்தார்.

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள விஷேட தேவையுடைய நிலையங்களில் இருக்கும் இளைஞர் யுவதிகளின் திறமைகளை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு முன்னாள் கிழக்கு மாகாண பிரதிக் கணக்காய்வு அத்தியட்சகரும் சர்வதேச மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிரதிநிதியுமான பா.சுப்ரமணியம் தலைமையில் நேற்று (23) திருகோணமலை விஷேட தேவை நிலையத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வுக்கு கௌரவ அதிதியாக கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

விஷேட தேவையுடையவர்கள் எந்த விதத்திலும் குறைந்தவர்கள் அல்ல. அவர்களுக்குள் பல திறமைகள் இருக்கின்றன. அவர்கள் செய்யும் வேலைகளை ஒரு சாதாரண மனித னால் செய்ய முடியாதுள்ளது. அந்த விதத்தில் சாதாரணமானவர்கள் செய்து சாதிக்கும் சாதனைகளைவிட இவர்கள் செய்யும் சாதனைகளே மிகப் பெறுமதியானவை.

இவர்களுக்குள் குறைபாடுகள் இருந்தாலும் அவர்களும் சமூகத்தில் மதிக்கப்பட வேண்டியவர்கள். அவர்களின் திறமைகளை வெளியுலகுக்குக் கொண்டு வரவைப்பதற்கும் இவ்வாறான பங்களிப்புகள் இன்றியமையாதவை. அவர்களின் திறமைகளைத் தேசிய ரீதியாகவும், சர்வதேச ரீதியாகவும் கொண்டு செல்வதற்குத் தேவையான வளங்கள் மற்றும் உபகரணங்களைப் பெற்றுத் தருவதற்கான சகல விதமான உதவிகளையும் செய்துதர முன்நிற்பேன்.– என்றார்.

இந்நிகழ்வில், கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், திருகோணமலை நகர சபையின் செயலாளர், கைலேஷ்வரா கல்லூரியின் அதிபர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு அவர்களின் திறமைகளை பாராட்டி பதக்கம் அணிவித்து பரிசில்களையும் வழங்கி கௌரவித்தனர்.





# மாணவர் தூதுவர் வேலைத்திட்டம்

(ஹஸ்பர்)

திருகோணமலை மாவட்ட செயலகம் மற்றும் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் ஏற்பாட்டில் மாணவர் தூதுவர் தேசிய வேலைத் திட்டம் தொடர்பான இரண்டாம் கட்டச் செயலமர்வு மாவட்ட அரச அதிபர் சாமிந்த ஹெட்டியாராய்ச்சி தலைமையில் திருகோணமலை மாவட்ட செயலக பிரதான மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

2024 ஆம் ஆண்டு பாடசாலைகளில் நடைமுறைப்படுத்தக்கூடிய முன்னாயத்த திட்டங்களை உருவாக்குவது தொடர்பாகவும் மற்றும் கல்வி, சுகாதாரம், பாதுகாப்பு போன்ற மூன்று துறைகளுக்குரிய செயலமர்வும் இடம் பெற்றது.

சிறுவர்களின் உரிமைகள், சிறுவர் பாதுகாப்பு, தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் சேவைகளைப் எவ்வாறு பெற்றுக் கொள்ளல், மாணவர் தலைவர்கள் தமக்கான தலைமைத்துவ பண்புகளை வளர்த்துக் கொள்ளும் விதம், பாடசாலைகளின் சிறுவர் பாதுகாப்பு தொடர்பான பல்வேறுபட்ட விடயங்கள் இதன் போது மாணவர்களின் மத்தியில் தெளிவூட்டப்பட்டது.



இந்த நிகழ்வில் மாவட்ட உள சமூக உத்தியோகத்தர் மு.மு.மு.ஸம்ஸீத், மகளீர் மற்றும் சிறுவர் பாதுகாப்பு பொலிஸ் பிரிவு உத்தியோகத்தர் நளினி, வைத்தியர் முபீஸ் ஹனிபா மற்றும் பாடசாலை மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.



# கல்முனை ஸாஹிரா மாணவர் உத்தியோகபூர்வ நாடாளுமன்றம்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

கல்முனை ஸாஹிரா தேசிய கல்லூரியின் மாணவர் நாடாளுமன்றத்தின் உத்தியோபூர்வமாக அமர்வு மாணவர் நாடாளுமன்றச் சட்ட திட்டத்துக்கு அமைவாக இடம்பெற்றது.

கல்லூரி அதிபர் எம்.ஐ.ஜாபிர் தலைமையில் இடம்பெற்ற மாணவர் நாடாளுமன்ற அமர்வை அவதானிப்பதற்காக மாணவர் நாடாளுமன்ற உறுப்பினர்களின் பெற்றோர் சமூகமளித்திருந்தமை விஷேட அம்சமாகும்.



# பாடசாலை மாணவரிடையே போதை ஒழிப்பு விழிப்புணர்வு!

(ஹஸ்பர்)

திருகோணமலை மாவட்டத்தின் தம்பலகாமம் பிரதேச செயலர் பகுதிக்கு உட்பட்ட சிராஜ் முஸ்லிம் மகாவித்தியா லயத்தில் பாடசாலை மாணவர்களுக் கான போதை ஒழிப்பு விழிப்புணர்வு நிகழ்வு இடம்பெற்றது.

தம்பலகாமம் பிரதேச செயலர் திருமதி ஜெ.ஸ்ரீபதியின் வழிகாட்டலில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

போதைப் பொருள் அற்ற இளைஞர் தலைமுறை என்ற தொனிப் பொருளின் கீழ் பாடசாலையில் இந்த நிகழ்வு இடம் பெற்றது.

போதை பொருள் தடுப்புக்காக பாட சாலை மாணவர்கள், மாணவ தலை வர்கள் மற்றும் இளைஞர் தலை வர்க ளுக்கான விழிப்புணர்வு நிகழ் வாக இது ஏற்பாடு செய்யப்பட்டிருந் தது.

போதைப் பொருளை ஒழிப்பதும் பாவனைகளைக் கட்டுப்படுத்துவதும் இளைஞர்களின் ஒத்துழைப்பு மற்றும் சமூக மட்டத்திலான ஒத்துழைப்புக்கள் தொடர்பிலும் இந்த நிகழ்வில் விரிவாக பேசப்பட்டது.

இதில் சமுதாயம் சார் சீர்திருத்த அபிவிருத்தி உத்தியோகத்தர் டீ.ஹம் சபாலன், உளவளத்துணை உத்தியோ கத்தர் ஏ.எச்.முகம்மது றியாத், இளைஞர் சேவை அதிகாரி ஐ.ஜாபீர், பாடசாலை ஆசிரியர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.




# தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு திருப்பழுகாமம் நூலகத்தில் பரிசளிப்பு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

2023 ஆம் ஆண்டுக்கான தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு மட்டக்களப்பு, பழுகாமம் பொது நூலக மண்டபத்தில் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன.

போரதீவுப்பற்று பிரதேச சபை மற்றும் பழுகாமம் பரம்பரை ஒன்றியத்தின் அனுசரணையுடனும் பழுகாமம் வாசகர் வட்டத்தின் ஒத்துழைப்புடனும் இந்த நிகழ்வு ஒழுங்கு செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.





# மாணவர்கள் கௌரவிப்பு

(சப்னா றிபாஸ்)

அக்கரைப்பற்று பள்ளிக்குடியிருப்பு அஸ்- ஸபா வித்தியாலத்தில் சாதனையாளர்களை கௌரவிக்கும் நிகழ்வு இடம்பெற்றது.

பாடசாலையின் அபிவிருத்திக் குழுவின் செயலாளர் எஸ்.எம்.லாபீரின் நெறிப்படுத்தலின் கீழ் கல்லூரி அதிபர் எம்.ஜே.எம்.அன்வர் நௌஷாத் தலைமையில் பாடசாலையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் தென் கிழக்குப் பல்கலைக்கழக அரசியல் பீட பேராசிரியர் பாஸில் பிரதம அதிதியாகவும், கோட்டக் கல்வி அதிகாரி உட்பட பாடசாலையின் அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள், பெற்றோர்கள் விஷேட அதிதிகளாகவும் கலந்துகொண்டனர்.



இதேவேளை தரம் ஐந்து புலமைப் பரிசில் பரிட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கும் மற்றும் விளையாட்டு துறையில் தேசிய ரீதியில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கும் அதிதிகளால் பரிசில்களும் நினைவுச் சின்னங்களும் வழங்கப்பட்டன.

# குச்சவெளியில் போதை ஒழிப்பு நிகழ்வு

(ஹஸ்பர்)

குச்சவெளி பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட நிலாவெளி கைலேஸ்வரா பாடசாலை மாணவர்களுக்கான போதை ஒழிப்பு விழிப்புணர்வு நிகழ்வு இடம்பெற்றது.

இந்த நிகழ்வானது 'போதை பொருள் அற்ற இளைஞர் தலைமுறை' என்ற தொனிப் பொருளில் பாடசாலையில் இடம் பெற்றது.

போதையை ஒழிப்பது மற்றும் அதன் மூலம் ஏற்படும் தாக்கம் தொடர்பில் மேடை நாடகம் மூலமும் மாணவர்களுக்கு இதன் போது வழிகாட்டப்பட்டது.

இதில் வளவாளர்களாகத் தம்பலகாமம் பிரதேச செயலக சமுதாய சீர்திருத்த அபிவிருத்தி உத்தியோகத்தர் பா.ஹம்சபாலன், உளவளத்துணை உத்தியோகத்தர் ஏ.எச்.முகம்மது நியாத், இளைஞர் சேவை அதிகாரி யுவராஜ், பாடசாலை ஆசிரியர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



# மாணவர் சிப்பாய் படையணி ‘கடெற் வோக்’ மட்டக்களப்பில்!

(பழுவூரான்)

தேசிய மாணவர் சிப்பாய் படையணியின் 142 ஆவது வருட நிறைவை முன்னிட்டு மட்டக்களப்பில் தேசிய மாணவர் சிப்பாய் படையணியின் கடெற் வோக் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை (23) இடம்பெற்றது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்காவின் வழிகாட்டலில் பாதுகாப்பு அமைச்சின் நிகழ்சி நிரலுக்கு அமைவாக தேசிய மாணவர் சிப்பாய் படையணியின் சிறப்பம்சங்களை வெளியுலகுக்கு வெளிப்படுத்தும் வண்ணம் இது இடம்பெற்றது.





மட்டக்களப்பில் 38 ஆவது தேசிய மாணவர் சிப்பாய் படையணியின் கடெற் வோக் மிகச்சிறப்பாக இடம்பெற்றது.

38 ஆவது தேசிய மாணவர் சிப்பாய் படையணியின் கட்டளைத் தளபதி லெப்டினன்ட் கேணல் ஜீ.டபிள்யு.எச். நிலந்த தலைமையில் மட்டக்களப்பு காந்தி பூங்கா முன்பாக ஆரம்பிக்கப்பட்ட நடை பவனி, மட்டக்களப்பு அரசடி சந்திவரை சென்று அங்கு பான்ட் வாத்திய அணியினர் மற்றும் மாணவர் படையணியின் அணிவகுப்பு மரியாதையுடன் நிறைவு பெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் திருமதி.ஜே.ஜே.முரளீதரன் , மண்முனை வடக்கு பிரதேச செயலர் வ. வாசுதேவன், பொலிஸ் உயர் அதிகாரிகள், கல்வி திணைக்கள அதிகாரிகள் எனப் பலர் இதில் கலந்து கொண்டனர்.

நடைபவனியில் மட்டக்களப்பு மத்திய கல்லூரி, புனித மிக்கேல் கல்லூரி, மயிலம்பாவெளி ஸ்ரீ விக்னேஸ்வரா வித்தியாலயம், வின்சன்ட் மகளீர் உயர்தர தேசிய பாடசாலை உள்ளிட்ட 6 பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

# திருகோணமலை செயலகத்தில் தொழில் வழிகாட்டல் கூட்டம்

(ஹஸ்பர்)

திருகோணமலை மாவட்ட செயலகத்தின் திறன் அபிவிருத்தி பிரிவின் தொழில் வழிகாட்டல் உப குழுவின் கூட்டம் மாவட்ட அரச அதிபர் சாமிந்த ஹெட்டியாராய்ச்சி தலைமையில் மாவட்ட செயலக உப ஒன்றுகூடல் மண்டபத்தில் நடைபெற்றது.

மேலதிக அரச அதிபர் ஜே.எஸ். அருள்ராஜ் வழிகாட்டலில் மாவட்ட திறன் அபிவிருத்தி உத்தியோகத் தர்களால் இது ஒழுங்கமைக்கப்பட்டி ருந்தது.

2024 ஆம் ஆண்டுக்கான தொழில் வழிகாட்டல் தொடர்பான பொது செயற்றிட்டம் ஒன்றை உருவாக்குவது தொடர்பாக இதில் கலந்துரையாடப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் கிழக்கு மாகாண கல்வி திணைக்களத்தின் வழிகாட்டல் ஆலோசனைக்கு உரிய உதவி கல்வி பணிப்பாளர், திருகோணமலை மாவட்டத்தின் வலயக்கல்வி அலுவலகங்களின் தொழில் வழிகாட்டல் உத்தியோகத்தர்கள், ஆலோசனை வழிகாட்டல் உத்தியோகத்தர்கள், மாவட்டத்தின் தொழில் பயிற்சி நிறுவனங்களின் உத்தியோகத்தர்கள், உயர்கல்வி நிறுவனங்களின் உத்தியோகத்தர்கள், மாவட்ட மற்றும் பிரதேச செயலகத்தின் துறைசார் உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.








# மண்முனை செயலகத்தில் ஒளி விழா!

**(வி.ரி.சகாதேவராஜா)**

மண்முனை தென் எருவில்பற்று பிரதேச செயலக வருடாந்த ஒளி விழா பிரதேச செயலர் திருமதி சிவப்பிரியா வில்வரத்னம் தலைமையில் பிரதேச சயலக மாநாட்டு மண்டபத்தில் இடம் பெற்றது.

அதிதிகளால் மங்கல விளக்கேற்றப் பட்டதைத் தொடர்ந்து அருட்தந்தை ஜீ. அம்றோஸ், அருட்திரு அ. நிரஞ்சன் ஆகியோரின் ஆசிச் செய்தியுடன் நிகழ்வுகள் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

பெரியகல்லாறு தூய அருளானந்தர் தேவாலய மாணவர்கள் மற்றும் தேற் றாத்தீவு புனித யூதா ததேயு தேவாலய மாணவர்களால் கரோல் கீதம், நாடகம், நடனம் போன்ற பல கலை நிகழ்வுகள் ஆற்றுகை செய்யப்பட்டன. பிரதேச செயலக உத்தியோகத்தர்களால் பாடல்களும் இசைக்கப்பட்டன.

இதன் போது நத்தார் தாத்தா வருகையுடன், நிகழ்வுகளை ஆற்றுகை செய்த மாணவர்கள் மற்றும் அலுவலக உத்தியோகத்தர்களின் பிள்ளைகளுக்கான பரிசில்களும் வழங்கிவைக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் உதவி பிரதேச செயலர் திருமதி சத்யகௌரி தரணி தரன், நிர்வாக உத்தியோகத்தர் வே. தவேந்திரன், அலுவலக பதவி நிலை உத்தியோகத்தர்கள், அலுவலக உத் தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.





# அடிப்படை வசதிகள் இன்றி டங்கல் மேற்பிரிவு மக்கள்!

**(மஸ்கெலியா நிருபர்)**

மஸ்கெலியா பிரதேச சபை நிர்வா கத்துக்கு உட்பட்ட டங்கல் மேற்பிரிவு மக்கள் பல்வேறு அடிப்படை வசதிகள் இல்லாத நிலையில் வாழ்ந்து வரு கின்றனர்.

இந்தத் தோட்டப் பகுதிக்குச் செல் லும் பாதை குன்றும் குழியுமாக மிக மோசமான நிலையில் உள்ளது.

இதன் காரணமாக நோயாளிகளை கொண்டு செல்வதில் மாத்திரம் அன்று பாடசாலைக்கு செல்லும் சின்னஞ்சிறு மாணவர்களும் பல்வேறு சிரமங்க ளுக்கு தினமும் முகம் கொடுத்து வரு கின்றனர்.

இந்தத் தோட்டப் பகுதியில் இருந்து சுமார் 8 கிலோ மீற்றர்வரை நடந்து சென்றே தமது கல்வியை தொடர வேண்டிய துர்பாக்கிய நிலை இருப் பதாக பெற்றோர்கள் தெரிவிக்கின்றனர்.

சுமார் நூறுக்கும் அதிகமான மாண வர்கள் தினமும் மோசமான நிலையில் காணப்படும் பாதையின் ஊடாக கால் நடையாக பயணித்து தமிழ் கல்வியை தொடர வேண்டிய நிலை ஏற்பட்டுள் ளது.

1985 ஆம் ஆண்டுவரை இந்தப் பகுதியில் ஆரம்பப் பாடசாலை ஒன்று இயங்கி வந்த போதிலும், எவ்வித காரணமுமின்றி அந்தப் பாடசாலை மூடப்பட்டது. இதன் காரணமாகவே இந்தப் பகுதியில் உள்ள சிறுவர்கள் தொலைதூரம் நடந்து சென்று தமது கல்வியைத் தொடர வேண்டி உள்ள னர்.

அதேபோல் ஹித்தோட்டத்துக்கென வைத்தியசாலை ஒன்று இல்லை. டங்கல் கீழ் பிரிவில் வைத்தியசாலை ஒன்று உள்ளது. அங்கு தேவையான வைத்தியர்களோ அல்லது சுகாதார தரப்பினரோ இல்லை. இந்த நிலையில் தமது சுகாதார நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு மற்றும் தமக்கு ஏற்படும் நோயிலிருந்து தம்மை பாதுகாத்துக் கொள்வதற்கான சிகிச் சைகளுக்காக ஹித்தோட்ட மக்கள் பல்லாயிரக் கணக்கில் செலவழித்து மஸ்கெலியா மற்றும் டிக்கோயா கிளங் கன் வைத்தியசாலைகளுக்கு செல்ல வேண்டிய நிலை காணப்படுகிறது என்று மக்கள் கவலை தெரிவித்துள் ளனர்.

தற்போது அரசுடன் இணைந்திருக் கும் மலையக தமிழ் மக்கள் பிரதி நிதிகள் மற்றும் எதிர் தரப்பில் உள்ள மக்கள் பிரதிநிதிகள் அனைவரும் ஒன்று சேர்ந்து இந்தத் தோட்ட மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வு பெற்றுத் தருமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

மூடப்பட்ட ஆரம்ப பாடசாலையை மீண்டும் இயங்க வைப்பதற்கான நடவடிக்கைகளை மக்கள் பிரதிநிதிகள் மற்றும் கல்வி ராஜாங்க அமைச்சர் முன்னெடுக்க வேண்டும் என்ற வேண் டுகோளையும் விடுத்துள்ளனர்.

# பண்ணையாளர்களது போராட்டத்துக்கு ஈரோஸ் ஜனநாயக முன்னணி ஆதரவு!

## கண்டன அறிக்கையும் வெளியீடு

(பழுவூரான்)

மயிலத்தமடு பெரிய மாதவனை கால்நடை வளர்ப்பாளர்களின் மேய்ச்சல் தரை ஆக்கிரமிப்புக்கு எதிராகப் பண்ணையாளர்கள்மேற்கொண்டுவரும் அறவழிப் போராட்டத்துக்கு ஈரோஸ் ஜனநாயக முன்னணியினராகிய நாம் ஆதரவு வழங்குகின்றோம்.

இவ்வாறு ஈரோஸ் ஜனநாயக முன்னணியின் மட்டக்களப்பு மாவட்டச் செயலாளர் சதாசிவம் லக்ஷ்மன் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அந்த ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு,

மட்டக்களப்பு மாவட்டம் செங்கலடிப் பிரதேசத்தின் கீழுள்ள மயிலத்தமடு பெரிய மாதவனைப் பிரதேசத்திலுள்ள மேய்ச்சல் தரையில் பல்லாண்டு காலமாக பரம்பரை பரம்பரையாக கால்நடை வளர்ப்பில் ஈடுபட்டு வரும் பண்ணையாளர்களின் செயற்பாடுகள் முடக்கப்பட்டுள்ளன. அவர்களின் வாழ்வாதாரமும் மாவட்டத்தின் பொருளாதாரமும் சிதைக்கப்பட்டுள்ளன. பொருளாதார ரீதியில் அழிவை மேற்கொள்ளும் நில ஆக்கிரமிப்பாளர்களின் இனவாதச் செயற்பாட்டை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

கால்நடை வளர்ப்பு என்பது தமிழ் பேசும் மக்களின் பொருளாதாரத்துடன் மட்டுமன்றி தமிழர்களின் வழிபாடு, கலை, கலாசாரம் பண்பாட்டுடன் தொடர்புபட்டுள்ளது. எனவே பொருளாதாரத்தையும், கலை, கலாசாரம் மற்றும் பண்பாட்டைப் பாதுகாப்பது எமது அடிப்படை உரிமையையும் முதல்நிலை கடமையுமாகும்.

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள மேய்ச்சல் தரைப் பகுதியில் அத்துமீறி ஊடுருவும் அம்பாறை மற்றும் பொலன்னறுவை மாவட்டங்களைச் சேர்ந்த சிங்கள நில ஆக்கிரமிப்பாளர்கள் மிகவும் துணிகரமாகக் காடுகளையும் மேய்ச்சல் தரைகளையும் தினந்தோறும் அழித்து நில ஆக்கிரமிப்பில் ஈடுபடுகின்றனர்.

இவர்களைச் சட்டத்தின் முன் நிறுத்தி நடவடிக்கை எடுக்க வேண்டியவர்கள்- குறிப்பாக,பொலிஸார் மற்றும் வனவளத் துறை அரச அதிகாரிகள் வேடிக்கை பார்க்கும் செயற்பாடு இனவாதத்தின் உச்சமாகவே எண்ணத் தோன்றுகிறது.

மட்டக்களப்பு மாவட்டக் கால்நடை வளர்ப்பு பண்ணையாளர்களின் சட்ட ரீதியானதும், நீதியானதுமான கோரிக்கைகளை ஏற்று நீதிமன்றங்களில் பிறப்பிக்கப்பட்ட கட்டளைகளை அமுல்படுத்தத் தவறிய பொலிஸாரின் செயற்பாடுகளை இனவாதத்தின் இன்னொரு முகமாகவே நாம் கருதுகின்றோம்.

அத்துடன் மட்டக்களப்பு நகர இனவாதப் பௌத்த துறவியால் தமிழருக்கெதிராகத் தெரிவிக்கப்படும் மிகமோசமானதும், மிலேச்சத்தனமானதுமான கருத்துக்கள் மீது பொலிஸார் நடவடிக்கை எடுக்காதது கண்டிக்கத்தக்கது.

தமிழர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் இனவாத, மதவாதச் சிந்தனையாளர்களின் விசமத்தனமான கருத்துக்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்காது வேடிக்கை பார்ப்பது சமாதானத்தை விரும்பும் தமிழர்களின் சகிப்புத் தன்மையை கேள்விக்குரிய - கேலிக்குரியதாகவே கருத இடமுண்டு.

பண்ணையாளர்கள் முதல் நாடாளுமன்ற உறுப்பினர்கள்வரை, எமது பாரம்பரிய மேய்ச்சல்தரவை நிலத்தினுள் பிரவேசிக்கும் போது ஆயுத முனையில் அச்சுறுத்தப்படுகின்றனர். இது கண்டிக்கத்தக்கது.

இனவாத காடையர்கள் மற்றும் நில ஆக்கிரிமிப்பாளர்களால் பொது மக்களுக்கு அச்சுறுத்தல் விடுவது, கால்நடைகள் மீது துப்பாக்கிச்சூடு நடத்துவது, அவற்றைக் கொலை செய்வது, காயப்படுத்துவது, கால்நடைகளை வாள் போன்ற கூரிய ஆயுதங்கள் கொண்டு வெட்டிக் கொலை செய்வது, காயம் ஏற்படுத்துவது, மின்சாரம் பாய்ச்சிக் கால் நடைகளைக் கொல்வது, வாய்வெடி வைத்தும் யானை வெடிகளைப் பண்ணையில் வெடிக்கச் செய்தும் கால்நடைகளை அழிப்பது, கால்நடைகளைக் கடத்துவது போன்ற செயல்கள் தொடர்ந்தும் நடைபெறுவதை வன்மையாகக் கண்டிக்கிறோம்.

காலங்காலமாக மயிலத்தமடு பெரிய மாதவனை மேய்ச்சல் தரையாகப் பாவிக்கப்பட்ட நிலங்களை பண்ணையாளர்களின் கால்நடை வளர்ப்பு நடவடிக்கைக்கு ஒதுக்கி வர்த்தமானி வெளியிடல், வெளிமாவட்டத்தில் இருந்து சட்ட விரோதமாக நில ஆக்கிரமிப்புச் செய்பவர்கள் மீது உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும், அழிக்கப்பட்ட மற்றும் திருடப்பட்ட கால்நடைகளுக்கு உரிய இழப்பீடு வழங்குதல், மயிலத்தமடு பெரிய மாதவனைப் பகுதியிலுள்ள காடுகளை அழிப்பவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுத்தல், பண்ணையாளர்களின் கால்நடை உற்பத்திகளை அபிவிருத்தி செய்வதற்கு நவீன ஊக்குவிப்புத் திட்டங்களை வகுத்து மாவட்டத்தின் பொருளாதாரத்தை உறுதி செய்தல் ஆகியன கோரிக்கைகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளன.

எனவே இவர்களின் கோரிக்கைகளை நிறைவேற்ற அரசு ஆவன செய்ய வேண்டும்.- என்றுள்ளது.

# மட்டிக்களியில் ஒளிவிழா

(ஹஸ்பர்)

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள விசேட தேவையுடையவர்களின் ஒளிவிழா நிகழ்வு மட்டிக்களியில் உள்ள செவிப்புலன் வலுவிழந்தோர் அமைப்பின் பிரதான மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் மற்றும் தமிழரசு கட்சியின் மாவட்ட கிளைத் தலைவர் எஸ். குகதாசன், சட்டத்தரணி துஷ்யந்தன், மத்தியஸ்த சபைத் தவிசாளர் புவநேந்திரன் மற்றும் நகரசபை செயலாளர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இதன்போது பிள்ளைகளுக்குப் பாடசாலை உபகரணங்கள் வழங்கும் நிகழ்வும் கலைநிகழ்வும் இடம்பெற்றன.





# நடிகர் போண்டா மணி காலமானார்



நடிகர் போண்டா மணி நேற்று இரவு காலமானார். இவரது மறைவிற்கு திரை உலகத்தைச் சேர்ந்தவர்கள் இரங்கல் தெரிவித்துள்ளனர்

சென்னை பொழிச்சலூரில் நடிகர் போண்டா மணி குடும்பத்துடன் வசித்து வந்தார். இந்த நிலையில் சமீபத் தில் அவர் உடல்நலக்குறைவால் பாதிக்கப் பட்டார். இதையடுத்து சென்னை ஓமந்தூ ரார் அரசு மருத்துவமனை தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டார். அவரது இரண்டு சிறுநீரகங்களும் செயலிழந்த நிலையில் நடிகர்கள் அவருக்கு உதவி செய்தனர்.

இந்த நிலையில், நேற்று இரவு வீட்டில் திடீரென மயங்கி விழுந்த போண்டா மணி, குரோம்பேட்டை அரசு மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டார். அவரை பரிசோதித்த மருத்துவர்கள் அவர் ஏற்கனவே இறந்துவிட்டார் என தெரிவித்தனர். இரண்டு சிறுநீரகங்களும் செயல் இழந்தநிலையில் அவர் உயிரி ழந்துள்ளார் என தகவல் தெரிவிக் கப்பட்டுள்ளது.

போண்டா மணி ஒரு இலங்கை தமிழர் ஆவார். கேவிஸ்வரன் என்ற பெயருடன் இலங்கையில் இருந்து அகதியாக தமிழகத்துக்கு சென்றவர். அடிக்கடி போண்டா வாங்கி சாப்பிடுவதால் நண்பர்கள் அவரை போண்டா மணி என்றழைத்தனர். இதுவே சினிமாவிலும் அவருக்கு பெயராக அமைந்தது.

இலங்கை போரில் போண்டா மணியின் தந்தை அவர் கண் முன்பே குண்டடிப்பட்டு இறந்துவிட்டார். தாயார் காணாமல் போய்விட்டார். போண்டா மணிக்கு நடிகர் வடிவேலு தான் பெண் பார்த்து திருமணம் செய்துவைத்தார்.

போண்டா மணிக்கு மாதவி என்ற மனைவியும், ஒரு மகனும், ஒரு மகளும் உள்ளனர். மகள் வேல்ஸ் கல்லூரியில் 2 ஆம் ஆண்டு பட்டப் படிப்பும், மகன் 11 ஆவது வகுப்பும் படித்து வருகின்றனர்.

நடிகர் போண்டா மணியின் மறை வுக்கு திரைத்துறையினர் இரங்கல் தெரிவித்துள்ளனர். சென்னை பொழிச் சநல்லூரில் உள்ள அவரது இல்லத்தில் இறுதிச் சடங்கு நடைபெற உள்ளது.

# ஆதித்யா எல்.1 ஜனவரி முதல்வாரம் இலக்கை அடையும் என அறிவிப்பு



இந்தியாவின் முதல் சூரியப் பயண மான ஆதித்யா எல்.1 விண்கலம், பூமியிலிருந்து 1.5 மில்லியன் கிலோ மீற்றர் தொலைவில் உள்ள எல்.1 என்ற லாக்ராஞ்சியன் புள்ளியை ஜனவரி 6 ஆம் திகதி அடையும் என்று இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்தின் தலைவர் எஸ்.சோம்நாத் தெரிவித் துள்ளார். சூரியனை ஆய்வு செய்ய இந்தியா அனுப்பிய முதல் விண்கலம் ஆதித்யா எல்-1 என்பதால் அது குறித்த எதிர்பார்ப்பு அதிகரித்து வருக்கின்றது.

சூரியனை ஆய்வு செய்ய அனுப்பப் பட்ட ஆதித்யா எல்-1 விண்கலம் குறித்து இஸ்ரோ தலைவர் சோம்நாத் விளக்க மளித்துள்ளார்.

இந்த விண்கலம் செப்டம்பர் 2 ஆம் திகதியன்று ஸ்ரீ ஹறிகோட்டாவில் உள்ள சதீஷ் தவான் விண்வெளி மையத்தில் இஸ்ரோவால் ஏவப்பட்டது.

இந்த நிலையில் ஆதித்யா எல்.1 ஜனவரி 6 ஆம் திகதியன்று எல்.1 புள்ளியில் நுழையும் என்று சோமநாத் தெரிவித்துள்ளார்.

ஆதித்யா எல்.1 அதன் இலக்கை அடைந்தவுடன், அடுத்த ஐந்து ஆண்டு களுக்கு சூரியனில் நடக்கும் பல்வேறு நிகழ்வுகளை அளவிட உதவும் என்று சோம்நாத் குறிப்பிட்டுள்ளார்.

# மீனம்பாக்கம் விமான நிலையத்தில் அவசர நிலைமை ஒத்திகை!

சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்தில் அவசர நிலைமை ஒத்திகை ஒன்று நடத்தப்பட்டுள்ளது.

எனினும், இதனை எதிர்பார்க்காத பயணிகள் பலரும் முதலில் பீதியடைந்த போதும் பின்னர் நிலைமையை புரிந்துக் கொண்டனர்.

இந்த நிலையில், இந்த ஒத்திகையின் போது தீவிரவாதிகள் உட்புகுதல், தீயணைப்பு, பேரிடர் போன்ற அவசர காலங்களில் எவ்வாறு செயற்படுவது என்பது குறித்த பயிற்சிகள் இடம்பெற்றன.

இதன்போது தீப்பிடித்து எரிந்து கொண்டிருந்த ஒரு வாகனத்தை தீய ணைப்பு படை வீரர்கள் தண்ணீரை பீய்ச்சி தீயை அவசரமாக அணைத்தனர்.



அத்துடன், கீழே விழுந்து கிடந்த சிலரை மருத்துவக் குழுவினர் காப்பாற்றும் ஒத்திகைகளும் இடம்பெற்றன.

# ஹமாஸ் அமைப்பின் தாக்குதலில் இஸ்ரேல் வீரர்கள் 8 பேர் உயிரிழப்பு!



இஸ்ரேல்-ஹமாஸ் இடையிலான போர் தாக்குதலில் 8 இஸ்ரேலிய வீரர்கள் கொல்லப்பட்டுள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இஸ்ரேலிய இராணுவ படையினருக்கும் ஹமாஸ் போராளி படை குழுவினருக்கும் இடையிலான யுத்தம் காசாவில் தீவிரமாக நடைபெற்று வருகிறது.

ஹமாஸ் அமைப்பை முழுவதுமாக அழிக்கும் நோக்கத்தில் இஸ்ரேலிய இராணுவம் காசாவில் தரைவழி தாக்குதலை முன்னகர்த்தி வருகிறது.

இதில் அதிகளவிலான ஹமாஸ் போராளி குழுவினர் கைது செய்யப்பட்டும், கொல்லப்பட்டும் வருகின்றனர்.

அதே சமயம் ஹமாஸ் படையினர் இஸ்ரேலிய வீரர்களை ஆங்காங்கே தாக்கி வருகின்றனர்.

அந்த வகையில் காசாவில் தற்போது 8 இஸ்ரேலிய வீரர்கள் ஹமாஸ் படையினர் உடனான யுத்தத்தின் போது கொல்லப்பட்டுள்ளனர் என இஸ்ரேலிய பாதுகாப்பு படையினர் தெரிவித்துள்ளனர்.

இஸ்ரேலிய பாதுகாப்பு அமைச்சகத்தின் அறிக்கைப்படி, இதுவரை 154 இஸ்ரேலிய வீரர்கள் ஒக்டோபர் 20 ஆம் திகதி தரைவழி தாக்குதலை இஸ்ரேல் தொடங்கியபின்னர் கொல்லப்பட்டுள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஒக்டோபர் 7 ஆம் திகதி ஹமாஸ் அத்துமீறி நடத்திய தாக்குதலில் இருந்து இதுவரை 480 இஸ்ரேலிய வீரர்கள் கொல்லப்பட்டுள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 24 மணிநேரத்தில் காசாவில் 201 பேர் பலி!

இஸ்ரேலிய தாக்குதலால் காசாவில் கடந்த 24 மணிநேரத்தில் 201 பேர் பலியாகியுள்ளனர். 370 பேர் காயமடைந்துள்ளனர்.

காசாவில் உள்ள புலம்பெயர்ந்தோர் முகாமில், குண்டுவீச்சு தாக்குதலில் குழந்தைகள் உட்பட குறைந்தது 8 பாலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டனர்.

அதே நேரத்தில், ஜபலியா முகாம் மீதான மற்றொரு தாக்குதலில் அதிகமானோர் கொல்லப்பட்டனர் என கூறப்படுகிறது.

இதன்மூலம், 11 வார தாக்குதலில் காசாவில் இறந்தவர்களின் எண்ணிக்கை 20 ஆயிரத்து 258 ஆகவும், காயமடைந்தவர்களின் எண்ணிக்கை 53 ஆயிரத்து 688 ஆகவும் உயர்ந்துள்ளது என பாலஸ்தீன சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.



# ஒபெக் அமைப்பிலிருந்து அங்கோலா விலகியது!



உற்பத்தியின் அளவு பற்றிய முரண்பாடு காரணமாக எண்ணெய் உற்பத்தி அமைப்பான ஒபெக்கில் இருந்து அங்கோலா விலகியுள்ளது.

துணை சஹாரா ஆபிரிக்காவில் மிகப்பெரிய எண்ணெய் உற்பத்தி நாடுகளாக அங்கோலா மற்றும் நைஜீரியா உள்ளன.

சர்வதேச சந்தையில் எண்ணெய் விலையை அதிகரிப்பதற்கு 2024 இல் எண்ணெய் உற்பத்தியை மேலும் குறைக்க ஒபெக்கின் 13 அங்கத்துவ நாடுகள் மற்றும் அதன் 10 கூட்டணி நாடுகள் கடந்த மாதம் தீர்மானித்தன.

அங்கோலா தற்போது நாளொன்றுக்கு சுமார் 1.1 மில்லியன் பீப்பாய் எண்ணெய் உற்பத்தி செய்வதோடு ஒட்டுமொத்த ஒபெக் நாடுகளும் 30 மில்லியன் பீப்பாய்களை உற்பத்தி செய்கின்றன.

அங்கோலாவின் இந்த அறிவிப்பை அடுத்து மசகு எண்ணெய் விலை 1.5 வீதத்திற்கு மேல் வீழ்ச்சி கண்டுள்ளது.

கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற அமைச்சரவை கூட்டத்தின்போதே அங்கோலா ஒபெக்கில் இருந்து விலகும் முடிவை எடுத்துள்ளது.

இதுகுறித்து, அங்கோலா கனிம வளங்கள் மற்றும் பெற்றோலிய அமைச்சர் டயமன்டீனோ அசவேடோ தெரிவிக்கையில்,

“இந்த அமைப்பில் தொடர்ந்து இருப்பதால் எந்த லாபமும் இல்லை என்று நாம் கருதுகிறோம். எமது நலனை கருதி நாம் வெளியேறுவதற்கு தீர்மானித்துள்ளோம்” என்றார்.